Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.481/2016 |
| Police station | : | NT.P.S |
| Deposition of witness for Prosecution | : | L.w.6/P.w.4 |
| Name | : | Dr.ஜபிகா |
| Father Name/Husband Name | : | ஜஸ்டின் மோசஸ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 26.03.2026 நாளாகிய இன்று திரு.R.Buvaneshkumar, B.A, L.L.B(Hons), L.L.M., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர் .)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டம் குட்டக்குழி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் அரசு உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் 22.10.2016 அன்று கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் இரவு 11.25 மணியளவில் அவசர சிகிச்சை பிரிவுல் பணியில் இருந்த போது புதுத்தெரு, திருக்கண்டீஸ்வரச் சேர்ந்த முருகையன் மகன் ஜெகன் என்பவர் வந்தார். அவரை விசாரித்த போது அன்றைய தினம் இரவு 10.15 மணிக்கு கடலூர் கடற்கரை சாலையில் உள்ள மதுக்கடையில் அடையாளம் தெரிந்த 1 நபர் தன்னை கைகளால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்த போது சுயநினைவோடு காணப்பட்டடார். அவருக்கு வெளிக்காயம் ஏதும் இல்லை. அவர் தனக்கு கழுத்திலும், மார்பிலும் வலி இருப்பதாக கூறினார். அவருக்கு தொடுவலி ஏதும் இல்லை. அவருடைய அசைவுகள் சரியான நிலையில் இருந்தது. அவர் வெளிப்புற நோயாளியாக சிகிச்சை பெற்றுக் கொண்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று நான் கருத்துரை வழக்கினேன். **(நான் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) அ.சா.1 க்கு ஏற்பட்ட வலி ஒரு நபர் கைகளால் அடித்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

ஒரு நபர் வலி இல்லாமல் வலி இருப்பதாக பொய்யாக கூறலாம் என்று சொன்னால் சரிதான்.